வெளியீடு எண்: 31

# யோக சித்தி

(மூலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோக சித்தி

(மூலம்)

அருளியவர்:
கவியோகி சுத்தானந்த பாரதியார்.
அவர்கள்

வெளியிடுவோர்:
மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7233
1971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகியும் யோக சித்தியும்

கவியோகி சுத்தானந்த மகரிஷி, பிறவி யோகி, சுத்தசிவசக்தியருளால் இவர் கவிப்புலமையும், வித்தக நல்லறிவும் பெற்ருர். ஞானசித்தர் இவருக்குக் குருவாகி வந்து சமயோக சித்தியளித்தார். பூரண சித்தர் இவருக்கு வேதாகமக்கலையறிவைத் தூண்டினுர். தெய்வசிகாமணிப் புலவர் இவரது கவிப்புலமையைப் போற்றி இலக்கண இலக்கியங்களைப் பயிற்றினுர். இவர் பாதிரிமாரிடம் ஆங்கிலமும் பிரெஞ்சும் பயின்று ஐரோப்பிய இலக்கியப் புலமை பெற்ருர். விஞ்ஞானத்திலும் தேர்ச்சி பெற்ருர். யோகமும் விஞ்ஞானமும் இவர் வாழ்விற் கூடிக்குழைந்தன. இவர் பல மகான்களைக் கண்டு, பல சமயங்களையும் யோக சாதனங்களையும் தேர்ந்து தமது அனுபவங்களை மவுன நிட்டையில் ''யோக சித்தி''யாகச் சேர்த்து மனித சமுதாயத்திற்கு அளித்திருக்கின்ருர். இந்த யோகசித்தியின் கருத்து விளக்கமாக (50, 000) வரிகள் கொண்ட பாரத சக்தி மகாகாவியத்தை உலகுக்கு தந்திருக்கின்ருர். இந்த நூலை 25 ஆண்டுகள் அரவிந்தர் ஆச்சிரமத்தில் யோக சக்தியை வளர்த்து மௌனமாக இருந்து இயற்றியிருக்கின்ருர்.

இவர் மகாதுரிய சமாதியிலிருந்து தன் உள் அனுபவங்களைப் பல நூல்களாக வெளியிட்டிருக்கின்ருர். சிலகாலம் கல்வி, அரசியல், பொதுநலம், கிராமசேவை, நாளிதழ், வாரஇதழ்களில் பங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிப் பல அரிய சேவை செய்துள்ளார். மேற்கிலும் கிழக்கிலும் எல்லா நாடுகளிலும் சென்று சமயோக இயக்கத்தை பரப்பி வருகின்றார். உலகத்தைத் திருத்த வந்த புத்தர், மகாவீரர், ஏசுநாதர், முகமது நபி, ஜரதுட்ரர், வேதாந்த சித்தாந்த முனிவர்கள், இராமர், கண்ணன், காந்தி முதலிய மகான்களின் உள்ளங்களை இணைக்கும் சமயோக சாதனத்தை (Spiritual Socialism) எத்தனையோ நூல்களாக இவர் ஆக்கி உலகிற்கு வழிகாட்டியிருக்கின்றார். வருங்கால உலகம் இவர் காட்டிய வழியைப் பின்பற்றி நலமுறுவது உறுதி.

உலக நாடுகளிலெல்லாம் சென்று புகழ் சுமந்த கவியோகி நமது இலங்கைக்குப் பல முறை வந்து ஊர் ஊராகச் சென்று ஞான வேள்வி நடத்தி யோகப் பயிற்சியளித்து சமயோக முழக்கம் செய்து

> "ஒரே கடவுள், ஒரே உலகம், ஒரே ஆன்மநேயர் நாம், இன்பமே சூழ்க எல்லாரும் வாழ்க" என்று முரசு கொட்டி மக்களுக்குப் புதிய எழுச்சியைத் தந்தார்.

சுத்தானந்த மகரிஷியின் அன்பருள்ளே, வள்ளல் கனகராசா சிறந்த ஒருவர். அவர் தம் முயற்சியால் மில்க் வைற் சோப் தொழிற்சாலையை வளம் பெற வளர்த்துப் பலருக்கு உழைப்பும் பிழைப்பும் உதவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றார். இவர் சுத்தானந்தரின் அருள் நூல்களில் ஆர்வங் கொண்டு, உலகப் பொது நெறி என்ற நூலைத் தமது இலவச வெளியீடாக வெளியிட்டுள்ளார். இப்பொழுது யோக சித்தியை வெளியிடுகின்றார்.

நல்லறம் புரிவதற்கே, நலமுறப் பாடுபட்டுச்
செல்வத்தைச் சேர்த்து, நாடு சிறப்புற வழங்கும் வள்ளல்
பல்புகழ் சுமந்த வெண்பால் பண்புறு கனகர் எல்லாம்
வல்லவன் கருணை யாலே வாழிய வளமை யோங்கி.

என்று சுத்தானந்தர் வாழ்த்தியதே கனகராஜருக்குச் சிறந்த பேறாகும்.

யோக சித்தியைப் பாராயணம் செய்து பயன் பெற்று, பாரத சக்தியைப் படித்துக் கடைப்பிடித்து நலங்கள் கண்டு, மனித சமுதாயம் பொலிக.

இன்பமே சூழ்க, எல்லாரும் வாழ்க,
சுத்த சக்தி ஓம் சுபம்

யோக சமாஜம் இ. வைத்தியலிங்கம்
இலங்கை
5-6-71

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் வணக்கம்

எங்கும் நிறைவான பரம் பொருளே! மங்கலக் காலையில் மலர் முகங் காட்டுகின்றாய்; இள மணத் தென்றலில் இன்பக் குழலூதுகின்றாய்; 'அன்பு, அன்பு' என்று சோலைக் குயிலில் அகவுகிறாய்; அதோ பாயும் மலையருவியில், 'ஓம் - தத் ஸத் - ஓம்' என்று வேத முரசொலிக்கிறாய்; திங்களில் அமுத நகை புரிந்து, எல்லையற்ற கடலைப் பொங்கியெழுந்து ஆனந்தக் கூத்தாடச் செய்கிறாய்! இந்தக் குழந்தை களின் மாசற்ற உள்ளத்தில், வானரசை இலக்கு கிறாய்; மனைதோறும் சௌந்தர்ய சக்தியாக விளங்கி குல தருமத்தை வளர்க்கிறாய்; ஆணில் ஆண்மை, பெண்ணில் பெண்மையாகிக் காதற் கனலைத் தூண்டி, உலகம் உயிர் வாழச் செய்கிறாய்! வாழ்க்கை என்னும் எல்லையற்ற கலாசாலையில், இயற்கை என்னும் ஆசானைக் கொண்டு, பாடங்கற்பித்து, எமது மனத் தைப் பக்குவப் படுத்தி, முடிவில் உனது திருவடியே தஞ்சமென்று உணரவைக்கிறாய்!

பரம் பொருளே! உலகெலாம் உனது திருக் கோயில், உயிர்த் தொகுதி உனது திருமேனி; வாழ்க்கை உனது திருவிளையாடல். நீ வேறு, யாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறின்றி உள்ளும் புறமும் உன்னைக் கலந்து அந்தப் பேரின்பத்தால் உனது பாராலயத்தில் உலவச் செய்தருள்!

பரமனே! நீயே உண்மை, நீயே அறிவு, நீயே இன்பம், நீயே எங்கும், எல்லாம்! சாதி-மத-நிற-தேச-வகுப்பு வேறுபாடுகள் எமது மனத்தை விகாரப் படுத்தாமல், எவரையும் நினது நடமாடுங் கோயிலென்று காணும் அருளறிவை எமக்கருள். எமது வாழ்வு இன்பக் கனி குலுங்கி உயிர்த் தொகு தியாக விளையாடும் நினக்கே நிவேதனமாகுக!

அருள் தந்தையே! நாங்கள் நின் மைந்தர்கள். இந்த உலக மனையில் ஒரு குலமாக, ஒருவருக்கொரு வர் உதவியாக வாழவருள்! கொடுங்கோன்மை, தனியகந்தை, பொய், பொறாமை, ஆணவ மாயம், கொலை, புலை, கோள், வஞ்சம், குடி, களவு, சூது, வியபிசாரம், சண்டை, சச்சரவுகளின்றி, அன்பும், ஒப்புரவும், எளிமையும், வீரமும், இரக்கமும், அமை தியும், உண்டுடுக்க யோக்கியமான ஒரு தொழில் முயற்சியும் பயின்று, எங்கும் என்றும் எதிலும், உன்னையே கண்டு, உனக்கே வழிபாடாக வாழ அருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையே! எமது ஆற்றலுக் கேற்ற பொது நலம் புரியத் துணை செய்! 'எனது-யான்' என்னும் அகந்தை வேரோடு அழிக! பூரணனே! இந்த வாழ்வாறு, உனது அருட் சுடராழியில் கலக்க வருள்.! பரமாத்மனே வணக்கம். உனதருளில் வாழ்வதே யோக சித்தி, பூரண வாழ்க்கை. சுத்தம் வாழ்க! சுத்தன் வாழ்க! சுத்தயோக சமாஜம் வாழ்க ஓம் சுத்த சக்தி!

எல்லா உயிர்க்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே
எல்லா ருக்கும் இயல்பாம் இன்பம்
எல்லா வாழ்வும் இறைவன் யோகமே!

—சுத்தானந்த பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. கடவுளியல் 

### i. கடவுள்

ஓங்கார மாகி யொளியா யுயிர்க்குயிராய்
நீங்காதான் இன்ப நிறைவு. 1

உள்ளத்தான், ஓங்கு முலகத்தான், பேரின்ப
வெள்ளத்தான் விண்ணின் விளக்கு. 2

எண்குணத்தான், ஏகனே, எல்லா மடங்கவுளான்
புண்ணியனும் போதப் பொருள். 3

காற்றைக் கனலைக் கதிரைக் கடலுலகைத்
தோற்றினு னன்பர் துணை. 4

எல்லா மவனுடைமை; எல்லா மவனுணை;
எல்லா மவன்பொதுவென் றெண். 5

### ii. உள்ள பொருள்

பெயர்வடி வாதியவாம் பேதங் கடந்த
வுயர்பொருளொன் றுண்டென் றுணர். 1

பலர்பற் பலவாகப் பாரிற் பகர்வர்;
உளனெருவ னென்றே யுணர். 2

ஐந்தரணுக் குள்ளே யரசாளு மன்னவனை
ஐந்தடங்கி யன்பா லறி. 3

அருளாலே யுள்ளத் தறிவா யிலங்கும்
பொருளாலே யின்பப் பொலிவு. 4

விழிமி னெழுமினுள்ளே விண்ணரசைக் கண்டு
செழிமின்சுத் தானந்த சித்து. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iii. அருள் விளக்கம்

அறிவுச் சுடரோ னருட்கதிரா லெங்கும்
நிறையு நிறைவை நினை. 1

தாக்கற்று நோக்குந் தனித்தலைவன் சந்நிதிக்கே
யாக்கன்முத லைந்தொழிலு மாம். 2

ஒன்றெனவுந் தோற்ற மொடுக்கமதி லேயெனவுங்
கண்டவனே காட்சிக் கிறை. 3

பிண்டத்தி லுள்ளான் பிரமாண்டத் திற்கோயில்
கொண்டுலவுந் தெய்வமெனக் கொள். 4

நானென்ற மாயை நலிய நலியவுனைத்
தான்கொண்டு போற்றுமருட் டாய். 5

## iv. வழிபாடு

நேசம் பதிந்துள்ளே நின்றுருகி, நெஞ்சாரப்
பேசினுற் பேசும் பிரான். 1

அன்புண்மை யாக அமர்ந்த கடவுட்குன்
அன்புண்மை யால்வழிபா டாற்று. 2

பற்றற்றுப் பற்றிப் பணிந்துணர்வா லர்ச்சித்துத்
தொட்டுநில்; அஃதே துதி. 3

எனதென தென்ன லிடரா கு மென்றும்
அவனது வென்ன அருள். 4

தம்மைக் கொடுத்தோர்க்குத் தன்னையே தந்தருளும்
அம்மையப்ப னைவழி பாற்று. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V. கடவுட்டன்மை

மகிழ்விற் படைத்தளித்து மாற்றும் பொருளை
அகத்தூய்மை யாலே யறி. 1

வாய்மை நலனேன்பு வன்றெண் டடக்கமிவை
தூயவனைச் சேருந் துணை. 2

மெய்யன்பு நல்லுறுதி மேதக்க வொப்புரவாந்
துய்யவுளத் தொண்டர் துணை. 3

காமம் வெகுளி கலக்க மிலாதமனச்
சேமமத னிறையைத் தேர். 4

உள்ளப் பொதுவெளியி லோங்கு மணிவிளக்கைக்
கள்ளமற வுள்ளுறவிற் காண். 5

# 2. உலகியல்

## i. உலகாலயம்

உயிர்மேனி யாக்கொண்டே யோங்குமொரு சோதி
பயிலா லயமுலகு பார். 1

ஆருயிர்கட் கோருயிரா யாங்காங்கு நின்றியங்கும்
பாரால யத்தானைப் பார். 2

விரிவா னுலகை விளங்கருளா லாடும்
பரமான்மா வாகவே பார். 3

உலவுடலஞ் சிற்றுலகாம்; உள்ளத்தான் கோமான்;
நிலவியல்பே நீதி நெறி. 4

இயற்கையே யாக்கை; யிறைவனே யான்மா;
உயிர்க்குல மோர்தொடர்பென் றுன். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ii. உலகநிலை

உண்டில்லை யென்றேயாச் சண்டையேன்? உள்ள
பண்டுலகிற் பாங்குற் றிரு. [வரை 1

வகுக்கு மனமயக்கால் வையத்தைக் காணேல்;
உகக்கு மொளியறிவா லுன். 2

இருப்ப தொருபொருளே; யெல்லா மதுவே;
பிரிப்பதுபொய் மாயப் பிணி. 3

ஆலுக்கும் பூசனிக்கும் ஆய்ந்து கனிகொடுத்த
ஞாலத்தான் வைப்பே நலம். 4

மாறித் திரிந்து வளர்மன் னுலகினிலே
மாறாத வொன்றை மதி. 5

## iii. இயற்கை

இயற்கையின் புத்தகமே யின்பாக நோக்கிற்
பயக்கு மறிவுப் பழம். 1

பேசாது பேசிப் பெருநல் லறிவுணர்த்தும்
ஆசா னியற்கையே யாம். 2

கதிராற் கடன்முகந்து, கார்மேக நல்கி,
யிதஞ்செய் யியற்கையென் றாய்! 3

ஓசைப் படாம லொருகோடி யற்புதஞ்செய்
தேசுற்றுள் சித்தாடுந் தாய். 4

இயற்றுவ தெல்லா மியற்கையதைப் பற்றிப்
பயிற்றுக வாழ்வைப் பரிந்து. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iv. உலகுயிர்

ஒவ்வோ ருயிரு முலகின் வினைக்கணியாய்த்
தெய்வம் படைக்குமெனத் தேர். 1

வினைக்களவு தோற்றம்; விமலனரு ளாலே
யனைத்துயிரும் வீடடைத லாம். 2

போக்கு வரவற்ற பூரணனைக் கூடுதற்கே,
மீக்கூர்த்துச் செல்லுமுயிர் மேல். 3

பெண்ணின்றி ஆணில்லை; ஆணின்றிப் பெண்ணில்லை;
எண்ணிருவர் சேர்ந்தே யிகம். 4

வேறுபா டெல்லாம் விகற்ப மனமயக்காம்
ஊறுபா டன்றே ஓதுக்கு. 5

## v. உலக வாழ்வு

தன்னியல் பாந்தெய்வத் தன்மை யறியாக்கால்,
என்னபய னிப்பிறவி யே? 1

ஆட்சிபெற் றுள்ளே யகில விளையாட்டைக்
காட்சிபோற் கண்டு களி. 2

எத்தனையோ காரியங்க ளிந்த வினையுலகில்;
அத்தனையும் ஆடலென லாம். 3

வினையுலகை யஞ்சாத வீரன்போல் வெல்க,
மனவுறுதி யாலே மகிழ்ந்து. 4

அகிலவாழ் வத்தனையு மான்மவிரி வாக
நிகழுவதே யுண்மை நிறைவு. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. அறவியல்

## i. அறம்

தானு நிறைவுற்றுத் தன்னவரு மின்புறுதற்
கானவொழுக் காறே யறம். 1

மன்னு மனச்சாட்சி மன்னவன்சொல் என்னவென
வுன்னி நடத்த லுயர்வு. 2

'இவ்வழிச்செல்' லென்றொன்றுள் ளெச்சரிக்கை
அவ்வழியி லச்சமறச் செல். [செய்யுமே 3

அறமென் றறிந்ததனை யஞ்சாது செய்மின்;
இறைவனருள் காக்கு மினிது. 4

இறந்தபின் னெப்படியோ; ஈங்கண் ணுலகிற்
சிறந்த திருவினையைச் செய். 5

## ii. அற விரிவு

யாதொன்று காலத்திற் கேற்றபொது நன்மையதை
வாதின்றி யாற்றி மகிழ். 1

பழமை பழமையெனும் பல்லவியே பாடேல்;
புதுமை புதுமையெனப் போ! 2

மோகமய மின்றி, முரணற்ற முன்னேற்றம்
நாகரிக மென்றே நவில். 3

தொடர்ந்தார் துயரந் துடைக்காத செல்வன்
கடமை வழுவியோன் காண். 4

எதுதீ தெனநோக்கி யெள்ளற்க; நன்மை
யதுபோற்ற லாற்ற லறிவு. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iii. அறத் தகுதி

போக்கும் வரவும் பொழுதுமறி யோமதனல்,
யாக்கையோ டேசெய் யறம். 1

உண்ண வுடுக்க வுவந்திருக்க நன்முயற்சி
பண்ணல் அறவாழ்வின் பண்பு. 2

சோர்வு விடுத்துச் சுயேச்சை யடைந்துலகில்
வீரனய் வாழ விரும்பு. 3

உலகோ ரருட்குலமா யொன்றியினி தோங்கு
நலமார் பொதுநிலையை நாட்டு. 4

உள்ளொளியிற் பூத்த வுயிர்வாழ்விற் சாதிமதச்
சள்ளையிலை சச்சரவுந் தான். 5

## iv. அற நெறி

விண்ணின் விரிந்த வியன்செய் யறநூலின்
உண்மை யுடுவி னுறும். 1

அன்புண்மை யின்சொ லடக்கம் பொறுமையருள்
இன்பப் பொதுநெறியென் றெண். 2

கொலை புலை, கூத்தி, குடிகளவு, சூதாம்
வலிய நரக வழி. 3

வசைசின வஞ்ச வழக்கற்றுத் தீய
நசையற்று நாணுற்று வாழ். 4

மூவழுக்கு நீங்குகவே, முத்தூய்மை யோங்கிநர
தேவர்குலம் வாழ்க செழித்து! 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V. பொதுநலம்

பிறர்க்கென வாழும் பெரியோரே சேர்வார்
துறக்கத்துங் காணாச் சுகம். 1

எத்துணை நன்றெண்ணி யிவ்வுலகிற் கன்புசெயல்
அத்துணை யான்மவிரி வாம். 2

ஈசன் அருண்மொழியை யெவ்வினத்தார் சொன்னா
ஆசையுடன் கேட்ப தறிவு. [லும் 3

அற்பம் பெரியதென் றெண்ணாம லன்புசெயு
நுட்ப வறிவுடைமை நோன்பு. 4

கீண்மேற் பிறரொடுதான் கேண்மைதெவ் வொன்
காண்போன் கருணைக் கடல். [றெனவே 5

# 4. அறிவியல்

## i. அறிவு

அறவின்பம், வாழ்வி னழகின்ப மெல்லாம்
அறிவின்ப ஊற்றி னமிழ்து. 1

எங்குற்றோ மென்னசெய லெங்கேக லென்றறிவோன்
கங்குற் கடல்கடந்தோன் காண். 2

போக்குவர வற்ற பொருளான்மா; நானது வென்
றேக்கமற் றின்புற் றிரு. 3

யானு முலகு மறிவுண்மை யின்பமயம்;
ஏனோ வெருவ லினி? 4

நம்பு, நினை, முயல்; நாடொருமை; ஞானமாம்
இன்பம் பெருகு மினிது. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ii. கல்வி

அறிவு தொழிலொழுக்க மாண்மை யழகாந்
திறமான கல்வித் திரு. 1

இயற்கைவளத் தோங்கி, யியற்புலனைத் தூண்டும்
இயற்கைநெறிக் கல்வி யினிது. 2

ஆற்றல் மிகப்பெருக்கி யாளாக்குங் கல்வியினைப்
போற்றுக வீரர் பொலிந்து. 3

மெய்க்கு மறிவிற்கு மேன்மை யுறுதிதராப்
பொய்க்கல்வி யாலென் புகழ்? 4

ஈகையு ளீகையா மின்கல்வி; பெற்றவனுக்
கேகுழி யெங்கு மிசை. 5

## iii. கற்ற பயன்

கற்ற வழியாற்றக் கற்றோனே கற்றோனும்;
மற்றவன் கற்ற மடம். 1

அருளற்ற நெஞ்சில் அடைத்தநூற் குப்பை
பொருளற்ற வெற்றுரையைப் போலும். 2

புலனைவென் றோனே புலவனும்; பாட்டாற்
கலகலப்போன் பேச்சுக் கடை. 3

வெள்ளத் தனைய விரிநூ லளந்தாலும்
உள்ளத் துணர்வே யுயர்வு. 4

கல்வியும் வாழ்வும் கவியுஞ் சுவையும்போற்
புல்லுவதே செல்வப் பொலிவு. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iv. ஆசான்–சீடன்

ஆசா னருளு மழிவில் லறிவொளியே
காசினிக் காகுமுளக் கண். 1

வானும் விளைநிலனும் வாரிதியும் வெற்பும்போல்,
ஞானகுரு செய்யு நலம். 2

நாட்டிற் பெருந்தகையா ளுளைவீ ரதகறிவை
யூட்டினன் பெற்றாரி னூங்கு. 3

அழகுநிறை யாசானுக் கன்புடைமை யீந்து,
பழகிடலே நல்லறிவின் பண்பு. 4

நாடிப் பணிந்தோதி, நற்சேர்க்கைத் தொண்டுடனே
சீடன்மெய் கற்றல் சிறப்பு. 5

## v. கலை வளர்ச்சி

போற்றுக தாய்மொழியைப் பொன் போற்புறநயங்
ஏற்றுக நாளு மெழில். [கண்(டு) 1

அருளறிவி லூறி, யழகிற் றவழ்ந்து,
பொருள்செழித்த பொற்கவியைப் போற்று! 2

பாட்டும் பரதமும் பண்புள்ள நாடகமும்
நாட்டிற்கு நல்ல நலன். 3

கண்ணைக் கருத்தையுறக் கைந்நயத்தை யின்புறுத்
கண்போல நுண்கலையைக் கா. [தும் 4

மெல்லியர்க்கு மென்கலைகள்; வீரத் திறனுண்மைக்(கு)
எல்லார்க்கும் எண்ணே யெழுத்து. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. அன்பியல்

## i. அன்பு

அன்பே கடவுளாம் அன்பே யருஞ்சமயம்
அன்பே யறிவிற் கணி. 1

அன்புள் ளிருந்தால், அடவியிலும் அச்சமில்லை;
தன்போல் அகிலவுயிர் தான். 2

சுமையுமெளி தாகுஞ் சுடுபகைநட் பாகும்;
நமனும்போ மன்பை நயந்து. 3

பொன்புகழி னாலன்று; பூதவுட லாலன்றே;
அன்பினால் ஆளை அறி. 4

தாயன்பு காட்டித் தமர்பிறரென் றோரமிலா
நேயனுக்கு முண்டோ நிகர்? 5

## ii. இனிமை

இன்சொல்லி னில்லை யியம்பி னிணங்காரின்
வன்சொல்லை மாற்று மருந்து. 1

கன்மீது கூர்செய்யுங் கத்திபோல், வன்சொல்லில்
இன்சொல்லைக் கூர்செய் யினிது. 2

விருப்பினிய சொல்லேயாம் வெம்பகைவன் கோப
நெருப்பை யவித்திடுநன் னீர். 3

மாற்றான்செய் துன்பமெலா மன்னித்துத் தான்மறக்
சீற்றமிலான் சீரியனே தேர். [கும் 4

தன்பிழையைப் போக்கிப் பிறர்செய் பிழைதாங்கி,
அன்புசெய்வான் அன்பர்க் கிறை. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iii. இன்னாதசெய்யாமை

இன்னாத செய்யாமை யென்னும் ஒழுக்கத்தாம்
மன்னுயிர்க் கெல்லா மறை. 1

'கொல்லேன், விழையேன், குடிகளவு சூதெண்ணேன்,
பொய்யே னென் றேயுறுதி போற்று, 2

மனத்தி லிரக்கமிலா மக்களை மாக்கள்
இனத்தினுஞ் சேர்த்த லிழுக்கு. 3

கதறக்கொன் றூனுண்ணுங் காதகர்க்கே தன்பு?
மதுவுண்பார்க் கேது மதி? 4

கூற்று மிடுகாடுங் கூடிய மாக்களே
நாற்றவுட லுண்ணு நரர். 5

## iv. நட்புரிமை

மாணப் பெரியது மன்னோ, மயக்குலகில்
ஆணவமில் லன்புத் தொடர்பு! 1

சீரியர் கேண்மை சிறிது கிடைத்தாலும்,
ஆருயிர்க்கு நல்லமுத மாம். 2

இடித்துத் திருத்து மிணக்க மினிது;
கொடுத்தும்புன் கேண்மை கொடிது. 3

உடல்பொரு ளாவி யுதவியுங் கொள்க,
கடவுட் பெரியார் கழல். 4

உயிரைக் கொடுத்து முயிர்பிரியா துள்ளே
உயிரொன்றி நட்பார் உறவு. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### V. பொறுமை

ஆற்றல் பொறையளவே யாகு மதனாலே
யேற்றம் பெறுமெங்கு மே. 1

வாய்மை, பகையாமை, மாட்சி, மனப்பொறுமை
காய்வானைக் காயும் படை. 2

பொறுமை புவிவெல்லும் புன்னகையால்; வாணப்
பொரிபோற் சினங்கரிந்து போம். 3

சாந்தியைப் போன்ற கருத்துறுதி யோடுநீ
தேர்ந்த திருவினையைச் செய். 4

அறந்தாங்கி வாழும் அருட்பெரியார் என்றும்
இறந்தும் இறப்ப திலர். 5

## 6. நடையியல்

### i. ஒழுக்கம்

முகத்தில் விளங்கும், முறையான வாழ்வால்
அகத்தொளிரு மான்ம வழகு. 1

தெய்வ மிகழார்க்குத் தேவரெதிர் பேசார்க்குப்
பொய்புகலார்க் காகும் புகழ். 2

தன்னடை போற்றுதான் சான்றுண்மை பேசுவதின்
மின்னைக் கரிதீட்டன் மேல். 3

குற்ற மிரங்கிக் குறையற் றெழுமின்கள்;
அற்றே நடையோங்கு மாறு. 4

காலையி லாற்றுங் கடமை வழுவார்க்கு
மாலையி லுண்டாம் மகிழ்வு. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ii. தீயன விலக்கல்

முரடர் துணையு முரண்பாடாஞ் சான்று 1
கரடியி யோட்டுங் கதை.

பேரைக் கெடுத்துப் பிணிசேர்க்கும் வேசைவழிச்
சேராரைச் சேருந் திரு. 2

வேரோ டொழிக விலைவாழ்வு; வீட்டறத்திற்
சீரோங்கு பெண்டிர் சிறந்து. 3

வட்டாஞ் சகுனி வலைப்பட்டு மன்னவர்கள்
கெட்டாரம் மாயம் கெடு. 4

நடையை மதியை நலத்தைப் புகழைக்
குடியைக் கெடுக்குங் குடி 5

## iii. புன்மை விலக்கல்

கோள்பொய் புகன்று குளிரவோ? வுன்னெஞ்சை
வாள்கொண் டறுக்குமனச் சான்று. 1

காதலரை நாயின் கதைகட்டிச் சீரழிக்கும்
பாதகரைப் பார்த்தல் பழி. 2

தற்பெருமைத் தம்பட்டந் தன்னுள்ளே யொன்று
அற்பமதி யாணவமே யாம். [மிலை; 3

கற்கண்டு போற்பேசிக் காஞறது தீவைப்பார்
மற்கொண்ட மாற்றாரிற் கேடு. 4

எள்ளி யிழித்த லிரத்தல், பிறர்பொருளைக்
கொள்ளைகொளல் புல்லர் குணம். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iv. வாய்மை

தூய்மையும் வாய்மையுந் தோழ ரவர்நட்பு
வாய்பவர்வாழ் வின்ப வனம். 1

'இப்பொய்யே யின்றுரைத்தோம்' என்று வருந்தி
அப்பொய்யை நீக்க லறிவு. [யுடன் 2

பயனுள கூறும், பழிபகையைப் போக்கும்-
நயனுள நாவி னலம். 3

பக்குவத்திற் கேற்ற பயனுரையே பேசிடுக;
மிக்கது, மோனம்; விரும்பு. 4

புறத்தூய்மை செய்யும் புனலைப்போ லுண்மை
மனத்தூய்மை செய்யு மருந்து. 5

## v. விந்தடக்கம்

சிந்தை யடக்கிச் சிறுபுலனைக் காத்தடக்கி,
விந்தை யடக்கிவளர் வீறு. 1

பிரம சரியம் பிழையின்றிப் போற்றின்
அரிய பயனெல்லா மாம். 2

ஆற்றல் அறிவாயு ளாக்கைநல வாழ்வின்ப
ஊற்றாகும் விந்துன் னுயிர். 3

ஆண்பெண் விலக்கில்லை; யான்மப் பொதுவுறவு
பூண்டார்க்கு நீங்கும் புரை. 4

வன்னியாய்க் கற்ற வலியுடையார் போற்றுகவே
நன்மனை வாழ்க்கை நயம். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7· இல்லறவியல்

## i. இல்லறம்

வீட்டின் விரிவே வியனுலக மாதலினல்,
வீட்டறத்தில் வெற்றி விளக்கு. 1

இல்லற மீசனரு ளெய்திய நல்லறமஃ
தில்லையெனி லில்லையுல கீங்கு. 2

இல்லறமே வீட்டின்பம்; இல்லாளு நல்வாழ்வும்
புல்லித் தழைக்கும் புகழ். 3

நல்லாளைக் காதலித்து நம்பி நனிவாழ்க
வள்ளுவரும் வாசுகியும் போல். 4

பூனேடு பொன்போற் பொருந்தி யறிவொளிரும்
ஆனேடு பெண்சக்தி யாம். 5

## ii. திருமணம்

காந்தமுனை மாறிக் கவர்வதைப் போலுமே
மாந்தருள் ஆண்பெண் மயக்கு. 1

காதல் மணமே கருத்திற் கினியமணம்;
ஏதும் வலுமணமென் றெண். 2

நல்ல குணமணியாய் நாணுடுத்த நல்லாளைக்
கொள்ளுக வாழ்வைக் குறித்து. 3

ஆக்கல் அழகுசெயல் அன்பறிவு மெய்யுறுதி
காக்கலிவை பெண்டிர் கடன். 4

கற்புயிர்; நாணழகு; காரிகைக்கு நற்கணவன்
சொற்படித லாகுஞ் சுகம். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iii. பெண்ணின் பெருமை

மென்மை யுடலின்பு மேதக்க வாழ்வெல்லாம்
பெண்மை யுவந்தளிக்கும் பேறு. 1

வாழ்க்கைத் துணையும், வகையும், விரிநலமும்
ஆக்கமும் பெண்சக்தி யாம். 2

அறமன்பு மைங்கடனு மாற்றிடலுக் காவாள்,
நிறைமனைவி யென்றே நினை. 3

பகட்டணி கொள்ளாள், பதிக்கணி யாவாள்
அகத்திற்கு வாய்த்ததிரு வாம். 4

பெண்ணிற் பிறங்கும் பெருங்கனலைப் புல்லினல்,
மண்வாழ்வு மங்கலவின் னும். 5

## iv. ஆண்மை

ஈட்டிமனை போற்றல் இசைபெருக நல்லறங்கள்
ஆற்றலிவை யாண்மைக் கழகு. 1

இல்லாளோ டன்புற் றிணங்கி யறங்காக்க
வல்லான் மணவாள னும். 2

மனைவியுடன் காதலாம்; மக்களுட னன்பாம்;
அனைவரொடுந் தண்ணருளே யாம். 3

தக்க மனையிருக்கச் சார்ந்தயலிற் சீரழிவான்
கக்கலை யுண்ணுங் கடை. 4

கண்ணொத்த வீட்டிற் கனதன மங்கலமே;
மண்ணொத்த வான்பயிரின் வாழ்வு. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V. காதலின்பம்

குலமோங்குஞ் சக்திக் கொழுத்தோங்கும் காதல்
நலமோங்க நாடோங்கு நாள். 1

ஈதலிற் காதற் கிணையில்லை; தண்முகிலும்
வாதத்தான் மாறு படும். 2

புண்ணுற்று மோகப் புணர்வுற்று நொந்தழியும்
கண்ணற்ற காமக் கடா. 3

பெண்ணைப் பழிக்காதே; பெண்ணை யிழிக்காதே,
பெண்ணைப் பெருமையுறப் பேணு. 4

காதலுல காக்கும் கனலதனை யீசன்பால்
ஈதலே யின்பமென் றெண். 5

# 8. குலவியல்

## i. தாய்

எல்லார்க்கும் ஓரன்னை ஈச னருளன்னை;
எல்லாரும் ஓர்குலமென் றெண். 1

தாய்சக்தி வாழிய! நீ தங்கக் குழந்தைகளால்
தேயம் வளர்க்குந் திரு. 2

தாய்மா ரிடத்தாகுந் தன்னாட்டின் சீர்மையெலாஞ்
சேய்வடி வாகச் செறிந்து. 3

வீறு மகனையே யீன்றெடுத்த மெல்லியற்கு
வேறுதவ மேனோ விளம்பு? 4

சோறூட்டும் போதன்பாய்ச் சொல்லிவாழ் வின்
வீரத்தா யூட்டும் விறல். [கடமை 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ii. தாய்ப் பணி

சாவையும் அஞ்சாது தாயின் பணிபுரிவோம்;
ஆவிக் குரியா ளவள்! 1

அன்னை யளித்தவுடல், அன்னை யளித்தவுயிர்
அன்னை யருட்பணிக்கே யாம். 2

மழையின் விளைநிலமும் மன்னுயிரும் வாழ்வுந்
தழைவது தாயன்பாற் றான். 3

அன்போடு கொஞ்சி யமுதிட்ட பொற்கையைப்
பின்பற்றி முன்னேறல் பீடு. 4

தாய்சொல்லும் அம்மொழியே தம்மக்க ளுஞ்சொல்
தாய்நன்று சொல்லத் தகும். [வார்; 5

## iii தந்தை

தந்தை செயலே தனயன் செயலாகும்;
தந்தைக் கொழுக்கந் தலை. 1

சுற்றம் புலன்வழியே தோய்ந்து மனம்பற்றும்;
சுற்றத்தைச் சுத்தமுறச் சூழ். 2

பெற்றோருங் கூடப் பிறந்தோரும் போலநீ
உற்றமனை நாடுலகு முன். 3

குலனென் றணங்குங் குரிசிலும் பொன்செய்
நிலனும் விதையும் நிகர். 4

அறிவுந் திருவும் அறநெறியும் அன்புந்
திறனும் பெருகுகநின் சேய். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iv. சேய்

இன்றுசேய் நாளையே யிப்புவியின் கையாகும்
என்றுசேய் போற்ற லினிது. 1

இல்விளக் காகு மினிய புதல்வர்க்குக்
கல்வியறி வாற்றலாங் கண். 2

நன்மக்க ளின்பெருமை நாட்டிற்கெல் லாம்பெருமை;
வன்மக்கள் வீட்டின் வசை. 3

தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி னார்மேல்வை
மாறுட்ட மில்லா மனம். 4

இளமையிலே பெற்றோர் இயற்றியதை மைந்தர்
முதுமையிலே செய்தல் முறை. 5

## v. சுற்றம்

நல்ல துணைநின்று நன்றி மறவாதான்
எல்லார்க்கு மின்னுறவென் றெண். 1

பாகத்தி லன்று; பரிந்த வுதவியினில்
தேகத் துணைவனைநீ தேடு. 2

கிளையுரிமை கொண்டாடிக் கேடுசூழ் வானுந்
தலையரிக்கும் பேனுஞ் சரி. 3

இன்னா புரிவார் இரத்தக் கலப்பெனினும்
ஒன்னா ரெனவே யுணர். 4

நன்னோக்கங் கொண்டுமனை நாடுய்ய வாழ்ந்திடலே
முன்னோர்க்குச் செய்யு முறை. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## vi பிழைக்கும் வழி

தேவை யறிந்து, செழுமையுறப் பொன் செய்து,
பூவையறிந் தில்லம் புரி. 1

கடன்செய் யிடம்பம் கவலைக்குத் தூது;
விடஞ்செய் வறுமைக்கு வித்து. 2

வீணணி யாடை விருந்து மணச்செலவு
நாண்வறுமை நாட்டி விடும். 3

மடைவாய்நீர் போல வழிந்துபோம் செல்வம்;
உடையாரிங் கீக வுவந்து. 4

திருநாள், பெருநாள், கருநாட் செலவு
வருநாளைப் போற்றி வழங்கு. 5

## vii குல நலம்

நிலநலத்தை வேண்டி, நிறைமுறையாம் வாழ்வாற்
குலநலத்தைப் போற்றக் குறி. 1

பசிக்குத் தொழிலும், பரமற்கு நெஞ்சும்
இசைக்கு வியன்செயலு மெண். 2

அச்ச மடிமை யகந்தை யிருள்வறுமை
இச்சகத்தைக் கொல்லும் எமன். 3

தின்றுபடுத் தீன்றெமன்வாய்ச் சென்றுபடல் வாழ்
பன்றிக்கு முண்டப் பயன். [வன்றே; 4

வீண்பகட்டும் வேண்டா வெறுமையு மில்லாது
மாண்புபெற வாழ்வாங்கு வாழ். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. தொழிலியல்

## i. முயற்சி

முயல்க, முயல்க, முயல்கமேன் மேலும்
பயன்களைவைத் தீசன் பதம். 1

தங்கு முயற்சியாற் சாராத தொன்றில்லை;
கங்கை கொணர்ந்தோன் கரி. 2

முயற்சிக்குச் சீதேவி முன்னாகும்; சோம்பும்
அயர்ச்சிக்கு மூதேவி யாம். 3

ஏதானு மொன்றை, யியற்புலமை கொண்டறிந்து,
மூதுலகம் வாழ முயல். 4

அவலப் படுவினையில் ஆற்றலைப் போக்கல்
உவர்நட்டு நீர்பாய்ச்ச லொப்பு. 5

## ii. வினைத்திறன்

முடிக்குந் திறனின்றேல் முந்திநா னென்னேல்;
அடக்கத்தி னற்ற லறிவு. 1

உழைத்த வுணவை யுவந்துசுவைத் துண்க;
வழுத்தி வழிபட்டு மன். 2

மாமனிதன் தேவனெனும் வாழ்க்கைப் படி
தாம்செய் வினையே தரும். [களெல்லாம் 3

தேவா சுரர்தாந்தாஞ் செய்யும் வினையாலே
யாவா ரிதனை யறி. 4

வையமெலாம் சிற்சபை; நல் வாழ்வெல்லாம் வேள்
செய்வதெலாந் தெய்வச் செயல். [வியே; 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iii. தொண்டு

நல்லவினை யேசூழ நாளு மிருப்பாயேற்
பொல்லா வினையெல்லாம் போம். 1

தொண்டா லுறுமகிழ்வே தொல்புவியுஞ் செய்தோ
அண்டரும் போற்று மகிழ்ந்து. [னும், 2

அருட்பணி யின்ப வமுதமாம்; பொல்லா
இருட்பணி நஞ்சா மிடர். 3

நாட்டி னடிமையு நல்குரவு நீக்கிடலே
வீட்டின்ப மென்ன விரும்பு. 4

ஒருண்மை தேர்ந்திங் குலகுய்யத் தொண்டாற்றி
யீருலகு மெய்தி யிரு! 5

## iv, வறுமையின்மை

பசியு நசையுமறு பட்டாலிப் பூவே
வசையற வோங்கிடும் வான். 1

இவ்வுலகைப் போற்றி யியல்பான நல்லறஞ்செய்;
அவ்வுலகி னின்பமெலா மாம். 2

இளைத்தோர்க் குணவு மியன்றோர்க் கறமும்
விளைத்து வறுமை விலக்கு. 3

நாட்டில் விளைபொருளந் நாட்டார் நலம்பெறவே
யீட்டு முயற்சி யினிது. 4

இன்மை மடமை யிரண்டும்பா பாசுரன்கை;
நன்மைவிழுங் காமல் நலி. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V. கைத்தொழில்

கைத்தொழி லொன்றற்றார் கையிருந்துங் கையற்றார்;
மெய்த்தொழிலின் வேர்வையில்ஆம் பொன். 1

இயற்கைதருஞ் சக்திகளை யந்திரத்தில் ஊக்கிச்
செயற்கரிய நன்மையெலாஞ் செய். 2

காலத்தை வெல்லுங் கருவி பலசெய்து
ஞாலத்தி லேவெற்றி நாட்டு. 3

ஒவ்வொரு கையும் உழைத்துப் பிழைத்தாலே
செவ்வியதாந் தேசத் திரு. 4

தொழிற்செல்வ மோங்கச் சுதந்திர வாழ்வாகும்
எழிற்செல்வ மோங்கும் இனிது. 5

## vi. வேளாண்மை

ஏரோசை பாருக் கிதயத் துடிப்புநாற்
போரோசை ஓங்காரம் போல். 1

சொற்போரும், விற்போரும், பொற்போருஞ்
நெற்போரொரான் றில்லா நிலை. [சோருமே 2

ஒருபயி ராக்கி யுணவீவான் பாரிற்
பெருமக னென்றுநீ பேசு. 3

பயிர்செய்வான் வாழ்க்கையே பாங்கு; மற் றெல்
அயல்சார்ந்த சேவகமே யாம். [லாம் 4

உழைத்துவிளைத் துண்ண வுவந்தா லுலகம்
செழித்து வளருந் தினம். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## vii. உழைப்பு

செய்யுங் கிணறுஞ் சிறுகுடிலும் பெற்றமுங்
கையுழைப்பு மீயுங் களிப்பு. 1

நூற்றுத் தறிநெய்து, நூல்கற்று, மண்ணுழுது
காற்றூட வாழக் களிப்பு. 2

மண்ணுழு துண்ணார், வறுமைகொடி தென்பார்க்குக்
கண்ணிருந்துங் கையிருந்து மென்? 3

கட்கஞ்சாத் தீயிலைகள் காப்பி யறநீக்கி
நற்பயிற்செய் யுண்டுடுக்க நாடு. 4

அந்தந்த நாட்டிற் கமைந்தபயிர் செய்துண்ணல்
அந்தந்த நாட்டார்க் கழகு. 5

## viii. பிழைப்பு

பாடுபட் டோருக்குப் பாட்டின் பயனெய்தில்
நாடுவிட் டோடும் நலிவு. 1

விளைப்பானே நேராக விற்றுண்ணு வானேல்
உழைப்பாளிக் கோங்கும் பிழைப்பு. 2

தன்னியல்புக் கேற்றபடி தாளாண்மை, வேளாண்மை
பண்ணுக; தீமை படும். 3

கூலி குறைந்தாற் குலங்குறையும்; பாட்டாளர்
ஞாலவாழ் விற்கு நரம்பு. 4

புவிமக ளீந்தபயன் போதிய மட்டும்
அவரவர் துய்த்த லறம். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ix. பணம்

நல்லன மல்கி நலமோங்க நல்வழியிற்
செல்வ முயற்சிகளைச் செய். 1

பணஞ்செய் படர்நீங்கிப் பண்டமாற் றேங்கின்
மணஞ்செய்யு நாட்டின் வளம். 2

போதைத் தொழிலாக்கிப் பொன்னைப் பொருளாக்கி
மேதைப் புகழை விரும்பு. 3

பொய்வஞ்சக் கள்ளர் பொருளைக் கவராது
தெய்வப் பணிக்குத் திருப்பு. 4

பைதந்த செல்வம் பலருண்டு வேலைசெயக்
கைதந் திடவே கருது. 5

## x. செய்வகை

இயற்றுக கால மிடம்வகை தேர்ந்தே;
பயக்கும் பருவமழை போல் 1

காக்கையிடம் பாட்டைக் கரக்கும் குயிலெனநீ
நாக்கடங்கி நன்முயற்சி செய். 2

பின்னு வதனைப் பெரிதுங் கருதியே
முன்னோர் வினையை முயல் 3

தாய்மொழியுந் தன்னறமுந் தாய்நாடுந் தண்ணரு
வாய்மையறி வும்பெருக வாழ். [ளும் 4

'ஓம்வணக்க' மென்ன வுபர்ந்தோா ரடிபணிக;
போமகந்தை; புண்ணியங்க ளாம். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## xi. வினை வெற்றி

சங்கடம் பொன்று ஜயமாந் திருவினைகள்
சங்குன் முதிரக் கதிர். 1

சொல்லிற் குறைபோலத் தோன்றி நிறைபெறுமே
பல்லுயிர் வாழும் பணி. 2

மலர்மெத்தை மீதல்ல, வாண்மீது சென்றே
பலர்நன்மை செய்தார் பரிந்து. 3

துணிந்துமுன் செல்க; துயர்க்குலந் தானே
பணிந்துவெற் றிக்காம் படி. 4

ஆருயிர்கட் கன்புற் றருள்வலியால் வெற்றிபெறும்
சீருயர்ந்த தெய்வப் பணி. 5

# 10. அருளரசியல்

## i. தலைமை

பாருலக மெங்கெங்கும் பாரோர் உரிமையலால்
ஓரோர் உரிமையா மோ? 1

இவனுயிரே யாகும் அவனுயிரு மென்னில்
எவனடிமை யாவனெவ னீங்கு? 2

குடியிற் குடியாய்க் குடியொத்துக் கோல்செய்
நடுநிலை யாட்சி நலம். 3

அறங்காக்கும் வீறும், அறிவழகும் வெற்றித்
திறங்காக்கு மன்னன் றிரு. 4

உண்மையே திண்மை; யுலகி லறமோங்கு
நன்மையே நாடாள்வான் சீர். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ii. தேர்ச்சி

குடிகளே தேர்ந்திதமாய்க் கொண்டவனே கோமான்;
நடுநிலைசேர் நாட்டத்தி னன். 1

தான முயரச் சமுதாய சேவைகளும்
மாணப் பெருகி வரும். 2

ஆராய்ந்து போற்றி யனைவருந்தேர் சீரியரே
பாரான் சபைக்கமைதல் பண்பு. 3

பொதுநலமே வாழ்வாகும் புண்ணியரைத் தேர்ந்
அதுநலமாம் பூவிற் கணி. [தால், 4

உள்ளத் துடிப்பில் உலகந் துடிப்பவரைத்
தெள்ளத் தெரிந்துடனே தேர். 5

## iii, நல்லாட்சி

தொத்தடிமை யின்மை, துயர்செய் முரணின்மை,
உத்தமனுள் ஊருக் கணி. 1

சிற்றூரிற் றேயம் தெரியும் படியாண்டு
வற்ரு நிறைவு வழங்கு. 2

பார்தழுவிப் பஞ்சம் பகையிருள்நோய் அச்சமறச்
சீர்வழியிற் செங்கோல் செலுத்து. 3

வறுமையற நற்றொழிலும், வாய்மை யறிவும்
முறைமையுறத் தந்துதவு முன். 4

ஒளிசெய்யுங் கல்வி யுலகிலெல் லார்க்கும்
எளிதுறச் செய்த லினிது. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iv. வரவு செலவு

கல்வி தொழில்சுகங் காப்பு நலங்கருதி
மல்குவரி வான்போல் வழங்கு. 1

தேவைக்கு மேற்சேர்க்குஞ் செல்வர் திறைவாங்கித்
தேவையறத் தேசநலஞ் செய். 2

எவரெவ ரெத்திறந்த ரென்ருய்ந்து போற்றி,
அவரவர்க் காந்தொழிலே யாக்கு. 3

மனங்கொண் டறவழியில் மாந்தர் ஒழுகின்,
கனங்கொள் படைச்செலவேன்? காட்டு! 4

கூரை பிடுங்கிக் குளிர்காய் வதுபோலும்
பாரைப் பிடுங்கும் பரிசு. 5

## V. படை

நயத்தால் அரசாள நாடாத மன்னன்,
பயத்தாலே கொள்வான் படை. 1

பார்மனம் பற்றிப் பரிந்துமுறை செய்நாட்டிற்
போர்வெறிகள் போக்கற்றுப் போம். 2

நஞ்சப் பகைவர் நடுநடுங்கப் போர்புரியும்
அஞ்சாப் படைவலிமை யாக்கு. 3

வீரப் பயிற்சிமிக வேண்டிப் புலிநரிகள்
ஊரைக் கெடுக்கா தொழி. 4

இன்றுவாழ் வென்றதனை யின்ஞெருவாள் வெல்லு
என்றுமிம் மண்ணுள் இயல்பு. [வதே 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## vi. வெம்மை விலக்கல்

காலைபோற் செய்யதிருக் காவலன் சீரோங்கும்;
மாலைபோ லாம்வெய்யோன் வாழ்வு. 1

கோதேறி ஞனேறுங் கொற்ற நெடுஞ்செருக்கு
மீதேறும் கற்போல் விழும். 2

நடுக்கி யடக்கிடவே நாளும்போ ராட்டம்;
அடுத்துத் தரவமைதி யாம். 3

பாரோடு வாழான் படைச்செருக்குத் தன்னரசை
வேரோடு சாய்த்து விடும். 4

ஆன்மநே யத்தால் அருளாட்சி யாலுலகில்
வானரசை யென்றும் வளர். 5

## vii. சட்ட திட்டம்

கட்டுக் கடங்கிக் கடமையினி தோங்கிடவே
சட்ட மியற்றத் தகும். 1

அதிகாரஞ் சொற்பம் அதிகஞ் சுயேச்சை
விதிசிலவா மாட்சி விரும்பு. 2

வித்தக நல்லோர், விதந்தெரிந்த மேன்மக்கள்
ஒத்துழைத்த லென்று முயர்வு. 3

ஐந்த னணியி லவைசேர்த் தறிவன்பர்
மந்திரத்தி ஞெழுமுறை மாண்பு. 4

அறவோர், தொழிற்புலவர், அஞ்சாத வீரர்,
அறிவாளர் நாட்டுக் கணி. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## viii. நாட்டன்பு

வீடுகளி னீட்டம் விரிநாடா மாதலினல்,
வீடென்றே நாட்டை விரும்பு. 1

வளமறிவு வீரம், வளரிசையு மாந்தர்
உளமகிழ்வு மோங்கியது நாடு. 2

நாந்திருந்தி மேலோங்க நாடுந் திருவோங்கும்;
தாந்தாந் திருந்தல் தலை. 3

அன்னையன் புக்கனலை யாவிதொறு மூட்டிடுவோம்;
பின்னே திருளச்சப் பேய்? 4

எந்தா யருட்பணிசெய் யின்பத்தி னின்பமிலை;
இந்திர போகமெமக் கெள். 5

## ix மக்கள் கடமை

ஆற்றப் பொறுத்துநல் லன்போ டறங்காத்தல்
மாற்றுனை மாற்று மருந்து. 1

உலகிலுன் ஞட்டை யுயர்த்துகமெய் வீரப்
புலவர்மலிந் தோங்கப் புகழ். 2

நல்லொழுக்கம் பற்றி நடந்து நடந்துதினம்
அல்லொழுக்கம் போக அடங்கு. 3

பணிந்து நடக்கை பயனியும்: வீரர்
துணிந்து நடக்கையினைப் போல். 4

வெற்றிபெற வாழ்தலும், வீட்டுநலந் தாங்கு
கற்றறிந்த மக்கள் கடன். [தலுங் 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## X. ஒற்றுமை

ஒற்றுமையே பேராற்றல்; ஒற்றுமையே வாழ்வின்பம்;
ஒற்றுமையே வெற்றிக் குயிர். 1

உள்ளொன்றி ஞலே யுலகொன்று மாதலிஞல்,
உள்ளத்தில் ஒற்றுமையை யூன்று. 2

பார்த்தால் மனத்தாற் பலவாகும்; சுத்தான்மா
போர்த்தா டியற்கைப் புவி. 3

மானிடர் தெய்வத் திருக்கூட்ட வாழ்வடைவர்,
ஆன்மவொருப் பாட்டுரிமை யால். 4

ஒன்றே யுயிருலகம்; ஒன்றே யுலகிறைவன்
ஒன்றே யிறைவனுறை யுள் 5

# 11. யோகவியல்

## i யோகசித்தி

பூரணத்தை யுட்புறமும் பூரணமா யொன்றிவளர்
பூரணமே யோகப் பொருள். 1

சக்திக் கதிராற் சகமொளிர வாழ்ந்திடலே
சுத்தான்ம சித்தியெனச் சொல். 2

சக்தியே முக்திபரா சக்தியே யின்பமருட்
சக்தியே சித்தியெனச் சாற்று. 3

''ஓம்சுத்த சக்தி'' யென வுள்ளே யுயிர்த்திடுமின்;
ஆம்சித்தி சக்தியரு ளால். 4

மதிநீ; வழிநீயே; வாழியறத் தாயே!
கதிரின்றிக் காணுமோ கண்? 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ii. உடலுறுதி

உடலுறுதி செய்க; உடலையொளி செய்க;
உடல முயிர்மனையென் றுன். 1

பத்தா மிருக்கை உயிர்ப்படக்கம் ஆறுவினை
சுத்தமுட னீயுஞ் சுகம். 2

ஈரெட்டு நான்களவில் ஈர்த்தடக்கி விட்டுயிர்ப்பின்
வேரெட்ட வுண்டாகும் வீறு. 3

அற்றுப் பசிகண் டளந்துண் டியல்வழிநில்;
குற்றமு ருதூன் குடில். 4

தூயவுணு தூய்நட்புத் தூயமனத் தூயருக்குக்
காயமுங் கண்ணுடி யாம். 5

## iii. இயற் சிகிச்சை

தீயமனத் தாலுந் திருவற்ற வாழ்வாலும்
நோய்பிறக்கு மென்றே நுவல். 1

தூயவுடை யூணுந் துகளறுவாழ் வுங்கொளலே
நோயு மருந்துமிலா நோன்பு. 2

பூத வுடலுக்கைம் பூதமே நன்மருந்தாம்;
பூத நிறை யெந்நாளும் போற்று. 3

உண்ணுமை மாற்றும் உடற்பிணியைக் காற்ருெளிநீர்
மண்வாழ்வார்க் காகு மருந்து. 4

உண்ணும் பணியை யுடல்வாழ் பரமனுக்கே
பண்ணும் பணியாகப் பார். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iv. மனவுறுதி

நிலைத்த மனமே நிலைபேறும்; ஆசை
யலைத்த திடர்க்கடலே யாம். 1

சுற்றும்போய் நெஞ்சைச் சுருக்கிச் சுகவழியே
பற்றற்று நிற்கப் பயில். 2

சினத்துடனே மண்ணைச் செயிப்பதினுந் தத்தம்
மனத்தை யடக்கிடலே மாண்பு. 3

நிலைக்கு நிலைநாடி, நீளவா நீந்தி
அலைக்கு மனத்தை யடக்கு. 4

நினைப்பி னுருவே நிசமாகும்; நல்ல
நினைப்பையே தேர்ந்து நினை. 5

## v. சித்த ஐயம்

வந்ததையும் போனதையும் வாதனைப்பட் டெண்ணு
சிந்தையலை யாதிருக்கச் செய். [வதேன் 1

ஒன்றினை யொன்றலே யோகம்; அலைமனத்தை
வென்றிடி னென்றும் விரைந்து. 2

தீனி முயக்கினிலே செல்லாதுன் வாளுளில்
ஞான முதிர்ச்சிபெற நாடு. 3

இன்பத்தி லின்பம் எனைத்திலுங் கட்டின்மை;
துன்பத்துட் டுன்பந் தொடர்பு. 4

பற்றற்று வாழ்ந்து, பரம சுகமெய்தக்
கற்றவனே கற்றூர்க் கிறை. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## vi. மௌனம்

செவிப்படக் கேட்டவை சிந்தித்துச் சித்தங்
குவிப்பது கற்பின் குறி 1

வாயடங்க நெஞ்சடங்க மௌனமே மந்திரமாம்;
சேயடங்குந் தாயைத் தெளிந்து. 2

தானாகக் கூடுந் தலைவன்முன் பேச்சடங்கும்
ஆனாத மோன மது. 3

வாய்ப்பேச் சடக்க, மனமடங்கி, நாடியாழ்
பாய்ச்சும் பரநாதப் பண். 4

இரவுபக லின்றி யெரிமுச் சுடரிற்
பரமான்ம நூலைப் படி. 5

## vii. தியானம்

நினைத்து நினைத்து நினைப்பற்று, நெஞ்சே,
நினைப்பற்றி நீயாகி நில். 1

சிதையாம லெண்ணித் தெளிந்தாலுன் னுள்ளே
"அதுநா"னென் றேயுணர லாம். 2

எழுந்து விழுந்தும் இடத்தமர்முன் னீர்போல்.
அழுந்தியுன் னுள்ளே யடங்கு. 3

பொன்னூற்றிற் பொங்கிப் பொலியும்வெண்டாமரை
அன்னமென் றன்னை யறி. [வாழ் 4

அமைதியின் பத்தில் அறிவுச் சுடராய்ச்
சமதை பெறுந் தன்னிலையைச் சார். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## viii. ஸஹஸ்ரார சித்தி

கர்ப்பூரத், தீபவொளி காட்டும் உடலுயிரும்
சிற்கனலை யேற்றச் சிரம். 1

ஆறுருவி யேழேறி, யானந்தத் தேனுண்ணும்,
சீறியெழும் ஆதாரத் தீ. 2

வெண்டா மரையில் விளைதேன் அறிவருளால்
உண்டார்க்கும் உண்டோ பசி? 3

ஊற்றைப்போற் பொங்கி யுலகைச் செழிப்பிக்கும்;
ஆற்றைப்போற் பாயு மருள். 4

கூற்றஞ்சி யோடுங் குலகுண் டலியுச்சிக்
கேற்றுக முக்கண் ணிடம். 5

## ix. சாகாக்கலை

என்று மிருப்பதனி லென்று மிருப்பதுவே
என்று மிருக்கும் இருப்பு. 1

பிறப்பிறப் பில்லாப் பெருவாழ்வு வேண்டின்,
மறப்பறவுள் ளூன்று மனம். 2

தேகாகிக் கெட்டாத சிற்சுக மெய்வாழ்வே
சாகாத சக்திக் கலை. 3

கூற்றையுதைத் தாடுங் கொழுந்தடியைப் பற்றினல்,
மாற்றேறும் பொன்னுடல மாம். 4

எப்போது மெண்ணி யிருப்பார்க் கியலுண்மை
தப்பாது வீசுந் தணல். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### x. கூற்றிற்கஞ்சாமை

சாதல், பழையவினைச் சட்டையறப் புத்துடலை
யீத லுயிர்க்கென் றியம்பு. 1

மாரடிப்பு வேண்டா! மகிழ்மினே, யிவ்வுலகப்
போரொழிந்து சாவு வரும் போது. 2

'வா'வென்னும்; வந்தால், மனைமக்க ளைப்பிரியேன்,
'போ' வென்னுங் கூற்றைப் புவி. 3

உண்மைக் குயிர்வாழும் உத்தமருக் கச்சமில்லை;
திண்மையிலார்க் கென்றுந் திகைப்பு. 4

என்றுந்தான், எல்லாந்தான், எங்குந்தான் சுத்
பொன்றுவது முண்டோ? புகல்? [தாத்மா; 5

## 12. சித்தியியல்

### i. மெய்த்துறவு

மனத்தி லருண்மல்கி மாணுலக முய்யுந்
தனைத்துறக்குந் தொண்டே தவம். 1

கனத்த நிதிகண்டுங் கட்டின்றி வாழு
மனத்துறவே வாய்மைத் துறவு. 2

பத்தாறும் வென்று பழுதற்ற சுத்தான்ம
சித்தரைத் தேவரெனத் தேர்! 3

அடிமைத் தளையுதறி யஞ்சாத வீரம்
மடமையை மாற்றும் மருந்து. 4

அழகெனக் காட்டி யடிமை தருவ
முழுவதும் போக்க முயல். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ii. பற்றறுத்தல்

பற்றே துயராகும்; பற்றறலே பேரின்பம்;
கற்றறிந்தோர் கொண்ட கருத்து. 1

வெற்றெலும்பை நாய்கடிக்கும் விந்தையென மாய
பற்றுழன்று நோவார் பலர். [மனப் 2

அழியாப் பொருளை யழியாது பற்றின்
அழியா அமரநிலை யாம். 3

கொண்டுவந்த தில்லை; கொடுபோ வதுமில்லை;
வண்டார் கனிமரம்போல் வாழ்! 4

நாளாக நாளாக நாளான மாயம்போய்,
ஆளாத லீசற்கென் றும். 5

## iii. மன மாயம்

சிரிப்பும் அழுகையுஞ் சேர்ந்தமன மாயம்
அரிப்பும் எரிப்பும்போ லாம். 1

ஆசை, பொறாமை, யகந்தையிவை, நெஞ்சத்திற்
பாசவலை வீசும் பகை. 2

தூசியிலா ஆடியிலே தோன்றுமுகம் போலான்மா
ஆசையிலா நெஞ்சகத்தே யாம். 3

இன்பவலை வீசி யிழுக்கு மனமாயந்
துன்பவலை யாகுந் தொடர்ந்து. 4

ஆசையழுக் கில்லாமல் ஐம்பொறியை வென்றவனார்?
ஆசா னுலகிற் கவன். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iv. தெய்வ வொளி

தெய்வ வொளிதனையே தேடு; பிறவெல்லாம்
கைநழுவுங் காலத்திற் காண். 1

ஆர்வக் கனலுடனே யாண்டவனை வேண்டினருட்
பேரமுத வான்பொழியும் பேறு. 2

'இருக்கிறே னீங்'கென் றிதயத்தா னுன்னை
யழைக்கிரு னுங்கே யடை. 3

மனத்தா டுருவி மணிமன் றொளிகாண்!
இனிக்கும் பரம்போ லிகம். 4

துரியமலை மீதேறிச் சோதிநடங் காணின்,
அரிய செயலெல்லா மாம். 5

## v. ஆத்ம சாந்தம்

பொன்னும் பொருளும் புவியு மளித்திடுமோ,
தன்னுள்ளா மின்பந் தனை? 1

உறவுந் துணையுமாம் உள்ளத்தான்; உண்மை
யறிவின்ப மாவ னவன். 2

இயல்பான வுன்னை யியல்பா யறிந்தே,
யியல்பாகி யின்புற் றிரு. 3

அன்னிய மின்றி யறிந்தடங்கி, யெக்காலுந்
தன்னிலையிற் ருனு யிரு. 4

கண்ணைத் திறந்து, கருணையொளி காட்டியருள்
உண்மைப் பரம்பொருளே ஓம்! 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## vi. அறவோர்

பார்வாழ்க்கை முற்றும் பரமன் வழிபாடாம்
பூரணருக் கென்றே புகல். 1

அறிதற் கரிதை அறிந்தங் கறவோர்
அறிவொளி யாவா ரவர். 2

அருட்கோயில் சுற்றி யணியணியாய் மாந்தர்
திருத்தக்க வாழ்வமையச் செய். 3

அதிமனிதர் தீரர், அருட்சக்தி மைந்தர்
புதுயுக வீரர்வரப் போற்று. 4

அறக்கடவுள் வாழி! யறம் வாழி! வாழி
யறவோர் அருள்வெற்றி யாங்கு. 5

## vii. போற்றி

போற்றுகிறே னுன்னைப் புவியே யிறைவடிவென்
ருற்றுகிறேன் அன்புப் பணி! 1

நடமாடுங் கோயில்காள்! ஞாலத் துயிர்காள்!
கடவுட் குலமென்றே காண்! 2

வான் பழுத்த வாழ்வே மகிழ்ந்து மகிழ்ந்தின்பத்
தேன்செழித்து வாழ்க தினம்! 3

இறைவ னருட்குடைக்கீழ் எல்லாரு மின்ப
நிறைவெய்தி வாழ்க நிலத்து. 4

விண்குடை தாங்கியருள் வேந்தனுக்கே யாளாவோம்
பண்ணும் பணியும் படைத்து. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## viii. அனைத்தும் வாழ்க

இதயம்பூ; மந்திர மின்சொ லுனதன்பு;
துதியாக வேயருளாய் தொண்டு. 1

போரற்றுப் பாரிற் பொறுமை விளங்கியுயிர்
சீருற்று வாழ்க செறிந்து! 2

உன்பொற் றிருமுகத்தை யுள்ளும் புறமுங்கண்
டன்புற் றிருக்க வருள். 3

இத்தல வட்டமெலா மென்மனைபோற் றொண்டு
சக்திக் கனலெனக்குத் தா. [செயச் 4

நல்லறிஞ ரோங்க, நலமோங்கிப் பூவெங்கும்
எல்லாரும் வாழ்க வினிது! 5

சுபம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மில்க்வைற் சோப் மேலுறைகளை

அனுப்பி

# அறிவு நூல்களைப்

## பரிசாகப் பெறுங்கள்




# மில்க்வைற் சோப் தொழிற்சாலை

த. பெ. எண். 77 யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233


சாந்தி அச்சகம், நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org